செ.வெ.எண்.553 நாள்: 13.10.2022

# பத்திரிக்கைச் செய்தி

## நீலகிரி மாவட்ட மின் - மாவட்ட மேலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

---------------

நீலகிரி மாவட்ட மின் ஆளுமை சங்கத்தின் கீழ் மின்-மாவட்ட மேலாளர் பதவிக்கு நீலகிரி மாவட்டத்தை சார்ந்த தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பி.இ., (BE) அல்லது பி.டெக் (B.Tech) பொறியியல் படிப்பில் கணினி அறிவியல் (Computer Science)/கணினி பொறியியல் (Computer Engineering)/தகவல் தொழில்நுட்பம் (Information Technology)/தகவல் தொடர்பு தொழில் நுட்பம் (Information and Communication Technology) ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது மூன்றாண்டு இளங்கலை (Graduate) படிப்பு முடித்து, முதுகலை (Post graduate) படிப்பில் எம்.சி.ஏ., (M.C.A.,) எம்.எஸ்.சி. (M.Sc.,) கணினி அறிவியல் (Computer Science),தகவல் தொழில்நுட்பம் (Information Technology) மென்பொருள் பொறியியல் (Software Engineering) போன்ற படிப்புகளில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். வேறு துறையில் பட்டம் பெற்றவர்கள் இத்தேர்வில் பங்கேற்க முடியாது. விண்ணப்பதாரர் கண்டிப்பாக நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதற்கான இருப்பிடச் சான்றிதழ் அல்லது பிறப்பிடச் சான்றிதழினை இணைக்க வேண்டும். தகுதியுடையோர் https://nilgiris.nic.in இணையதளம் வழியாக எதிர்வரும் **28.10.2022 மாலை 6.00 மணிக்குள்** தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இந்நேர்வில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் விபரங்கள் மற்றும் ஆன்-லைன் தேர்வுகள் குறித்த விபரங்கள் **02.11.2022 அன்று** தேர்வு நடக்கும் இடம் மற்றும் நேரம் மாவட்ட இணைய தளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் வேறு விபரங்கள் எதுவும் அனுப்பப்படமாட்டாது. ஆன்-லைன் தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் வருகிற **09.11.2022 அன்று** உதகமண்டலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்லூரிகளில் நடைபெறவிருக்கும் ஆன்-லைன் தேர்விற்கு நேரில் வரவேண்டும். அதனைத் தொடர்ந்து ஆன்-லைன் தேர்வில் மதிப்பெண் தரவரிசையின் அடிப்படையில் மட்டுமே முதல் மதிப்பெண் பணியிடம் வழங்கப்படும் மின் - மாவட்ட மேலாளர் பதவிக்கு விண்ணப்பிப்பது தொடர்பான முழு விபரங்களை https://nilgiris.nic.in என்ற இணைய தளத்தில் காணலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சா.ப.அம்ரித் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெற துவங்கும் நாள் | 14.10.2022 |
| விண்ணப்பிக்க கடைசி நாள் | 28.10.2022 மாலை 6 மணி வரை |
| தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் விவரம், தேர்வு நடைபெறும் இடம் மற்றும் நேரம் ஆகியவை வெளியிடப்படும் நாள் | 02.11.2022 |
| தேர்வு நடைபெறும் நாள் | 09.11.2022 |
| தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் | 09.11.2022 மாலை |

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPro ProNilgiris NilgirisPro